1103

ஓம்

ஸ்ரீதேவராஜாயநம:

# காஞ்சீபுரம்

மகிமையும், சரித்திரமும்,
கோவில்களும்.

SECOND EDITION.
All Rights Reserved.

அஜிதகுமார் கம்பெனி,
9, அம்மன் கோயில் தெரு,
ஜி. டி., சென்னை.

விலை 1 அணா.

O2:38.211
N28
59026

THE

# MADRAS GUIDE BOOK

**Price Rs. 3 only per copy.**

This is a unique publication which will be of very great use to Pilgrims, Students, Teachers and Touring officers, Members of Councils etc., etc. It deals with a variety of topics of absorbing interest.

**Some Opinions.**

"We get, of course, the descriptions of, and legends associated with Madras and Mysore and other places on 'the Pilgrim line' in the Mofussil. What adds immensely to the value of the book is, however the historical account of the various places. * * * The illustrations are excellent * * for future editions, we forsee a very large demand."

—*The Hindu.* *18-1-1928.*

"Embellished with as many as seventy excellent illustrations it is a very useful manual and a most realiable hand-book—historical and descriptive—for all visitors to Madras. Its utility and worth deserve praise. The reading matter is printed on feather weight paper and illustrations on art paper. To the visitor to or resident in Madras the book is indispensable as a handy *vade macum.*

—*The Hindusthan Review.*

*For descriptive booklets and copies write to :—*

AJITAKUMAR CO.,

G. T., Madras.

# போலி சரக்குகளைக் கண்டு

# ஏமாறாதீர்கள்!

# அமிர்தாஞ்சனம்




எல்லா நோய்களையும் வலிகளையும் கண்டிக்கும்

## திவ்யாமிர்தம்.

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ,

சென்னை. பம்பாய்.


A

## எல்லாருக்கும் அவசியமான புத்தகங்கள்.

### 1. "இந்திய மாதா."

மிஸ் காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும் கேட்டவைகளையும் திரித்து, பெரும் புரட்டாக தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப்புராண புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு தமிழர்களின் கையிலுமிருக்க வேண்டியது அவசியம். விலை ரூ. 1-8-0. தபால் செலவு வேறு.

### 2. ஸ்வப்ன சாஸ்திரம் என்னும் கனவு நூல்.

இது மிக்க அருமையான நூல். இது வடமொழியில் மஹா ரிஷிகளால் எழுதப்பட்ட ஷை சாஸ்திரத்திலிருந்து தமிழர் யாவருக்கும் பயன்படுமாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. அனுபவத்திற்கு ஆச்சரியப்படத் தகுந்தவாறு ஒட்டியிருக்கிறது. எல்லாரும் வாங்கும் பொருட்டே குறைந்த விலை வைக்கப்பட்டிருக்கிறது.—விலை அணு 6.

### 3. வணிக ரகசியம்.

இப்புத்தகம் ஒன்றிருந்தால் ஜீவனத்திற்கு வேறு வழி வேண்டியதில்லை. இருந்த இடத்திலிருந்தே தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்க்கு குறையாமல் சம்பாதித்துக் கொள்ளலாம். இப்புத்தகத்தினல் பயனடைந்தவர்கள் பலரிருக்கிறார்கள். ஒரு புத்தகம் வாங்கிப் பாருங்கள்.

விலை அணு 5.

கவனிப்பு.—எங்களிடத்தில் ஸ்கூல் புத்தகங்களும் இதர தமிழ் தெலுங்கு புஸ்தகங்களும் கிடைக்கும்.

விலாசம்:

ஓரியண்டல் புக் மார்ட்,

36, பெருமாள் கோவில் தோட்டத் தெரு, முதல் சந்து,

G.T., சென்னை.



59076

O2:38.2112.K

Medals Awarded.



Patronised by their
Exes. Sir Arthur and Lady Lawley.

If it is Shoes,
PUNT is the Word,
My Boy.

**Simply Say 'PUNT'**
**You get the BEST**

*For all Foot-wear, Order from,*

# PUNT & Co.,

**170, Broadway, MADRAS.**

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" யின் நூதன உற்பத்திகள்.

HIS MASTER'S VOICE

கிராம போன்கள் எல்லா பாஷைகளிலும் ரிகார்டுகள்

ஹார்மோனியங்கள், பிடில்கள், சீருதி பெட்டிகள், சைகில்கள், சிருவர்களின் மூன்று சக்கிர வண்டிகள், அவைகளுக்கு வேண்டிய சாமான்கள் வகையாரா கிடைக்கும்.

தயவுசெய்து கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—


ஹட்சின்ஸ் அண்டு கோ.,
185, பிராட்வே,
பிரான்சு : 42-43, வேப்பேரி ஹைரோட்,
மதருஸ்.

**HUTCHINS & CO.,**
**185, Broadway,**
**Branch : *42-43, Vepery High Road,***
**MADRAS.**

## ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோயில்.



கோபுரம்.



குளம்.

## ஸ்ரீ ஏகாம்பரநாத ஸ்வாமி கோயில்




கோபுரம்.




குளம்.

ஓம்.

ஸ்ரீ தேவராஜாயநமஃ

# காஞ்சீபுரம்

பூமிதேவிக்குச் சிரசாய் விளங்குவது நம் பரதநாடு. இப்பரத நாட்டிற்குக் காஞ்சிமாநகரம் திலகத்தை ஒக்கும். "நகரேஷு காஞ்சி" என்று பெரியோர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். நகரங்களுக்கெல்லாம் மிகவும் பழைமையானதும், அழகானதும், தெய்வத் தன்மை பொருந்தியதும் நம் காஞ்சிமா நகரமாகும்.

இந்நகரத்தில் ஆதி காலததில் பிரம்மதேவர் பூஜை செய்ததாலும், க என்றால் பிரம்மா என்றும், அஞ்சுதல் என்றால் பூஜித்தல் என்றும் பொருள் படுதலால் இந்தஸ்தலம் காஞ்சி என்ற திருநாமம் பெற்று வழங்கி வருகிறது. இது சம்பந்தமான புராணக்கதையை ஈண்டு சுருங்கச் சொல்லுவோம். இந்த இடத்தில் பிரம்மா தன் பத்தினி யின்றி ஓர் யாகம்செய்ய ஆரம்பித்தார். அந்த யாகாக்னி யினின்றும் கிளம்பிய திவ்யமூர்த்தியே ஸ்ரீ வரதராஜப் பெருமாள் என்கிற தேவராஜ ஸ்வாமிகளாவர்.

பிரம்மாவின் பத்தினியான சரஸ்வதி மிகக் கோப மடைந்து ஓர் நதியுருவங்கொண்டு அதிவேகமாகக் கிளம்பி அந்த யாகத்தை அழிக்கவந்தாள். அங்ஙனம் கிளம்பிவந்த நதிதான் இப்பொழுது காஞ்சீபுரத்தில் ஓடும் வேகவதியாகும். இதைக்கண்ட பிரம்மா, தனக்கு உதவி செய்யுமாறு ஸ்ரீ வரதரை வேண்டிக்கொண்டார். உடனே அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ வரதர் அவ் வேகவதிவரும் வழியில் படுத்துக்கொண்டார். அந்த இடத்தில் இப்பொழுது வேகாசேது என்னும் யதோக்தகாரி பெருமாள் கோயில் இருக்கிறது.

மற்றொரு புராணக்கதையும் உண்டு. அதாவது பிரளயத்திற்குப் பிறகு சிவபெருமான் வேதங்களை ஒரு மாமரமாக சிருஷ்டித்து அதன்கீழ் தான் ஓர் சோதி லிங்கமாக அவதரித்தார். முதன் முதல் அவர் இலலிதா தேவி என்னும் உலகமாதாவைப் படைத்தார். அவள் தேவர்களையும் மனிதர்களையும் சிருஷ்டித்தருளினாள். அச்சமயம் சிவபெருமான் சொன்னதாவது:—"உருத்திரனே பிரமம், அந்தப் பிரமத்தையன்றி மற்றொன்றும் இல்லையென்பது சித்தாந்தம். உண்மைப்பொருளை விளங்க உரைக்கும் பிரம்மஞான வேதமே ஒரு மாவிருட்சமாய் முளைத்திருக்கிறது. அந்த வேதத்திற்குத் தலைவரான யாமே அதனடியில் வாசஞ்செய்வோம். பதங்களில் சிறந்து விளங்கும் க என்னும் பதத்திற்குப் பொருள் பிரமம் என்பதாம். அந்த பிரமம் ஆன எம்மால் அஞ்சிக் கப்படலால் (அடையப் படலாம்) இந்த நகரம் மாறாப் புகழ்பெற்றோங்கும் காஞ்சி என்ற திருப்பெயர் பெறும்."

காஞ்சி பூமிதேவிக்கு நாபிக் கமலத்தை யொத்திருப்பதால் அப்பெயர் வரலாயிற்று என்று கூறுவாறுமுளர். ஆகையால் காஞ்சி மிகவும் தெய்வத்தன்மை பொருந்திய நகரமென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை.

## காஞ்சீபுர மகாத்மியம்.

இக்காஞ்சிமாநகர் மிகவும் பழைமையானதும், அழகானதும், தெய்வத்தன்மை யுடையதுமா யிருக்கின்ற காரணம்பற்றியே இந்நகரம் தக்ஷிண காசியென்று கூறப்படுகின்றது. இக்காஞ்சிமா நகரத்தைப்பற்றி, மிகவும் பழைமையான தமிழ் நூற்களில்கூட குறிப்புகள் காணப்படுகின்றன. சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் எழுதப்பட்ட பத்துப் பாட்டிலும்கூட காஞ்சியைப் பற்றி

யும் அதிலுள்ள யாதோக்த்காரி கோயிலைப்பற்றியும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. சில வருடங்களுக்குப்பின் எழுதப்பட்ட மணிமேகலை என்னும் பெருங் காப்பியத்தில் மணிமேகலை அமுதசுரபியுடன் காஞ்சிக்கு வந்ததும், காவிரிப்பூம் பட்டினம் கடலால் கொள்ளப்பட்டபோது அந்நகரவாசிகள் காஞ்சிக்கு வந்து குடியேறினதும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சுமார் 1,300 வருடங்களுக்குமுன் பௌத்த சீன பிரயாணிகனான ஹ்யூண்டி சாங் என்பவர் வட இந்தியாவிலுள்ள பல நாடுகளையும் பார்த்துவிட்டு காஞ்சீபுரத்திற்கு வந்தார். அந்தச் சமயம் தொண்டை மண்டலமும், அதன் ராஜதானிப் பட்டணமாயிருந்த காஞ்சீபுரமும் சிறப்புவாய்ந் திருந்தனவென்றும், அக்காலத்தில் நகரம் முழுவதும் ஜைன, பௌத்த, ஹிந்து சமயக் கோயில்கள் நிறைந்திருந்தனவென்றும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலேயே ஔவையார் "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று கூறியுள்ளார்.

## சரித்திரம்.

இத்தொண்டை நாட்டைச் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்தே பல்லவர்கள் அரசாண்டு வந்தார்கள். அவர்களில் சிலர் ஜைன மதத்தைச் சார்ந்தவர். சிவஸ்கந்தவர்மா என்னும் பல்லவ அரசன் முதலாவது நூற்றாண்டில் இருந்ததாகவும், அக்காலத்திலேயே ஜைனமத பிரபல ஆச்சாரியரான ஸ்ரீகுந்த குந்தாச்சாரியர் ஜைனமதக் கிரந்தங்களை எழுதினாரென்றுந் தெரிகின்றன. அக்காலத்தில் மிகவும் பராக்கிரமசாலிகளான அரசர்கள் பலர் இருந்தார்கள். இந்நகரம் கரிகால் சோழனால் நான்காம் நூற்றாண்டில் ஜெயிக்கப்பட்டது. அக்காலத்தில் கோயில்கள் பெரும்பாலும் மரத்தாலேயே கட்

டப்பட்டு வந்தன. பிறகு காஞ்சீபுரத்தை ஆண்டுவந்த மகேந்திரப் போத்தரையன் என்னும் பல்லவ அரசன் அநேக குகைக் கோயில்களை மாமண்டூர், சிங்கவரம், திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் முதலிய இடங்களில் வெட்டுவித்தான். இவனுக்குப் பிறகு இவன் மகன் நரசிங்கப் போத்தரையன் பட்டத்துக்கு வந்தான். அவன் பல நாடுகளையும் ஜெயித்து வீரசிங்கமாக விளங்கினான். அக்காலத்தில்தான் தொண்டை நாட்டுத் துறைமுகப் பட்டணமாய் விளங்கிவந்த கடல் மல்லை பெரிய பட்டணமாகி மாமல்லபுரம் என்ற பெயரும் அடைந்தது. மாமல்லன் என்பது நரசிங்கனுடைய பட்டப்பெயர். அவனால் செய்விக்கப்பட்ட மஹாபலிபுரத்திலுள்ள பஞ்சபாண்டவ ரதங்கள் மிகவும் அழகு வாய்ந்தன. அவை ஒரே கல்லிலிருந்து செதுக்கப்பட்டவை. அவன் காஞ்சீபுரத்தில் ஒரு கோட்டையும் கட்டினான். ஆனால் அக்கோட்டை அழிந்து போய்விட்டது. அது இருந்த இடத்திற்குத்தான் இப்பொழுது பாலையமேடு அல்லது பல்லவமேடு என்ற பெயர் வழங்கி வருகிறது. இக்காலத்திலேயே சைவமும் வைஷ்ணவமும் தலை எடுக்க ஆரம்பித்தது.

பிறகு எட்டாவது நூற்றாண்டில் இந்நாடு குலோத்துங்கச் சோழனது மகனால் ஜெயிக்கப்பட்டது. பன்னிரெண்டாவது நூற்றாண்டில் சோழ ராஜ்யம் வடக்கில் குறைய ஆரம்பித்துவிட்டது. டெல்லி சக்கரவர்த்தியாகிய அலாவுதீனுடைய சேனதிபதியான மாலிக்காபூர் தக்ஷிணத்தின்மேல் படை யெடுத்தபோது தொண்டை நாடும் சூறையாடப்பட்டது. சிலகாலஞ் சென்றபிறகு விஜய நகரத்தரசர்களுக்குக் கீழ் காஞ்சீபுரம் இருந்து வந்தது. இவர்களுக்குப் பிறகு சந்திரகிரி மஹா ராஜாக்களால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் 1646-ம் வருஷத்திலிருந்து

இந்நாடு கோலகொண்டாவின் முகமதிய அரசர்களின் கையில்பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. 1686-ம்ஆ அவுரங்கசீப் தக்ஷிணத்தின்மீது படையெடுத்து, பீஜப்பூரைப் பிடித்துக்கொண்டு, மராட்டியத் தலைவரான ஸாம்பாஜீயையும் கொலை செய்தான். சுதேச அரசர்களுக்குள் சண்டைகளும் சச்சரவும் உண்டாகி அவர்கள் பலம் குறையவே ஆங்கிலேயருடைய பலம் அதிகரித்தது.

செங்கற்பட்டு ஜில்லா ஆரம்பத்தில் கர்நாடக நவாபாகிய முஹம்மது அலி ஈஸ்ட்டு இந்தியா கம்பெனியாருக்குக்கொடுத்த ஒரு ஜாகீர். அன்று தொட்டு (கி. பி. 1760) காஞ்சீபுரம் ஆங்கிலேயர் கையில் இருந்து வருகிறது.

தொண்டை நாடு ஆதியில் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் முக்கியக் கோட்டமாகிய எயில் கோட்டத்தில்தான் காஞ்சிமா நகரம் இருந்தது. இந்த ஒவ்வொரு கோட்டமும் இன்னும் சிறிய பாகங்களாகவும் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மேற்சொன்ன கோட்டத்து அதிகாரிகள் அனைவரும் பொதுவாக அரச பரம்பரையில் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். கிராமத்திற்குறிய விஷயங்களிலநேகம் கிராமப் பஞ்சாயத்தார்களே கவனித்துக்கொண்டார்கள். நாட்டில் அதிகப் பெரியார்களாயுள்ளவர்கள் அரசனை நியமிக்க அதிகாரமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆறில் ஒரு பங்குதான் வரி வசூலிக்கப்பட்டது. ஜனங்கள் மிகவும் சுகித்து வாழ்ந்தார்கள்.

## ஆலயங்கள்.

59076

காஞ்சியை ஆலயங்களாலாகிய ஓர் நகரம் என்று சொல்லுவர். அங்கே 108 சிவாலயங்களும், 18 வைஷ்ணவாலயங்களும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இவ்வூரில்

கோவிலைத்தவிர அநேக மடங்களும் சரித்திரங்களும் இருக்கின்றன. பொதுவாகக் காஞ்சி, சிவகஞ்சி (பெரிய காஞ்சிபுரம்) என்றும், விஷ்ணுகஞ்சி (சின்ன காஞ்சீபுரம்) என்றும், ஜினகஞ்சி (திருப்பருத்திக்குன்றம்) என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வருகின்றது. இனி இம்மூன்று பாகங்களிலுள்ள கோவில்களைப்பற்றி தனித் தனியே சுருக்கமாகக் கூறுவாம்.

## சின்ன காஞ்சீபுரம்.

### ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில்.

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் ஓர் மிகவும் பெரிய கோயில். ஸ்ரீ வரதர் என்கிற தேவராஜர் பிரம்மா செய்த யாகத்தினின்று உண்டானவர் என்று முன்னமே சொன்னோம். இக்கோயிலுக்கு அருகாமையில் இருக்கும் யாக சாலை மண்டபம் மேற்சொன்ன யாகம் செய்த இடம் என்று சொல்லப்படுகின்றது. ஸ்ரீ வரதர் அத்தியூர் அல்லது ஹஸ்திகிரி என்று சொல்லப்பட்ட ஓர் சிறிய குன்றின்மேல் எழுந்தருளி இருக்கின்றார். இவருடைய மூர்த்திகரத்தையும், மகிமையையும்பற்றி வார்த்தையால் சொல்லி முடியாது. கண்டு தரிசித்தே களிகூரவேண்டும். அவரை தெரிசிக்கவரும் ஜனங்கள் எண்ணிலர். அது காரணம் பற்றியே “ஜனத்தில் பெருத்தவர் வரதராஜரென்றும் பணத்தில் பெருத்தவர் ஏகாம்பரநாதர்” என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள்.

விஜயநகரத்து அரசரான அச்சுதராயர் என்பவர் தன்னுடைய ராணியுடனும் இரண்டு குமாரர்களுடனும் ஸ்ரீ வரதரை தரிசிக்கவந்து இக்கோயிலுக்கு 17 கிராமங்களும், காமாக்ஷீ அம்மன் கோயிலுக்கு 8 கிராமங்களும் தானமாகக் கொடுத்தான். இதுவல்லாமல் அவன் அநேக

விலையுயர்ந்த ஆபரணங்களையும் பட்டாடைகளையும் வரதருக்குக் கொடுத்தான். சில நாட்களுக்குப் பிறகு சங்கு சக்கரம் நாமம் முதலியவை விலையுயர்ந்த கற்களால் இழைக்கப்பட்டு கோவிலுக்கு கொடுக்கப்பட்டன. இன்னும் ஆயிரம் பசுக்களும் தானமாகக் கொடுக்கப்பட்டன. அவன் தானங்களில் அரசர்களுக்குச் சிறப்பான "மஹா பூதகட தானத்தை" இக்கோயிலிலே செய்து முடித்தான். இந்தத் தானம் செய்கிறவர்கள் தங்களுடைய நிறைக்குச் சமநிறை தங்கத்தைக் கோவிலுக்கும் பெரியோர்களுக்கும் தானமாகக் கொடுத்தல் வேண்டும்.

தாயார் சந்நிதிக் கருகாமையிலுள்ள ஓர் கல்வெட்டு சாசனத்திலிருந்து அடியிற் கண்ட விஷயம் புலனாகின்றது. 1688-ம் வருஷத்தில் முகலாய சக்கரவர்த்தியாயிருந்த அவுரங்கசீப் என்பவன் தென்தேசத்தில் படையெடுத்து வந்தபோது எல்லா ஊர்களைப்போலவே காஞ்சீபுரமும் திடுக்கிட்டு நின்றது. அப்பொழுது ஜனங்கள் முகம்மதியர்களுக்குப் பயந்து மூன்று கோவில்களிலுமுள்ள விக்கிரகங்களை ரகசியமாக ஊருக்கு வெளியே எடுத்துச்சென்று கடைசியாக திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள உடையார் பாளையத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். கூடிய சீக்கிரத்தில் பயம் நீங்கிவிட்டது. ஆனால் வரதராஜருடைய மூர்த்திகரத்தைக் கண்டு ஆனந்த பரவசரான உடையார் பாளையம் ஜமீன்தார் மீண்டும் பெருமாளைக் காஞ்சீபுரம் அனுப்பச் சம்மதிக்கவில்லை. பிறகு ஒரு சிறிய பட்டாளங் கொண்டுபோய் ஜமீன்தாரரை பயமுறுத்தி, வரதராஜர் காஞ்சீபுரத்திற்குக் கொண்டுவரப்பட்டு கி. பி. 1710-ம் வருஷத்தில் கோயிலில் ஸ்தாபிக்கப்பட்டு ஓர் பெரிய திருவிழாவும் நடத்தப்பட்டது. இவ் விஷயத்தை ஞாபகப்படுத்துவதற்காகவே இன்றைக்கும்

"உடையார்ப்பாளைய உற்சவம்" என்றொரு திருவிழா நடந்து வருகிறது.

இக்கோயிலில் அநேக உற்சவங்கள் நடந்து வருகின்றன. அவைகளில் அதிவிசேஷமானது வைகாசி மாதத்தில் நடைபெறும் பிரம்மோற்சவம். அதில் கருடோற்சவம் வைகாசிமீ பௌர்ணமியின் காலையில் நடைபெறும். அப்பொழுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்தியாவின் பல பாகங்களிருந்தும் வருவார்கள். சித்திரைமீ பௌர்ணமியன்று நடபாய் உற்சவம் நடக்கிறது. அதுவும் ஒரு சிறப்பான உற்சவம். அன்று வரதராஜர் காஞ்சீபுரத்திற்குத் தெற்கே நாலு மைல் தூரத்திலுள்ள அய்யங்குளத்திற்குச் சென்று, அன்றிரவு திரும்புகையில் பாலாற்றில்வந்து தங்கி, மறுநாள் காலையில் கோயில்போய் சேருவார். பாலாற்றில் நடக்கும் உற்சவத்திற்குச் சமமான உற்சவம் மற்ற ஊர்களில் நடப்பதாகத் தெரியவில்லை.

## யதோக்த்காரி கோயில்.

திருமழிசையாழ்வார் சிஷ்யர் கணிகண்ணனென்பாரை ஒருநாள் ஒரு பல்லவ அரசன் பார்த்து, "உமது பரமகுருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்து வரவேண்டும்" என்றான். அதற்குக் கணிகண்ணர் "நம் ஆசாரியார் ஒருவரிடத்தும் எழுந்தருளார்" என்று கூறிவிட்டார்.

பல்லவன், "என்னையாகிலும் அங்கே அழைத்துப் போய் நான் எப்போதும் இளமைப் பருவத்திலேயே இருக்குமாறு செய்யவேண்டும்" என்றான். அதற்கு அவர் உடன்படாமல், "உன்னைப்போல் இளமைப் பயனையே யெதிர்நோக்கி நிற்பாரை ஆழ்வார் கண்ணெடுத்

துப் பார்த்தலும் அரிது" என்று மறுத்துவிட்டார். அதற்கு "நீயாகிலும் எனக்கு என்றைக்கும் யௌவனம் இருக்குமாறு ஒருகவி பாடவேண்டும்" என கணிகண்ணர் "நான் நாராயணனை பாடுவேனே யொழிய நரனைப் பாடமாட்டேன்" என்றார். பல்லவனுக்கு கோபம் வந்து "என் நகரத்தினின்றும் உடனே வெளியேபோ" வென்று உத்திரவிட்டான். இதைக் கணிகண்ணர் ஆழ்வாரிடஞ் சொல்ல, அவர் "நானும் பெருமாளை எழுந்தருளக்கொண்டு உன்னுடன் வருவேன்" என்று

கணி கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்.

என்று பாடிப் புறப்பட்டார். உடனே பெருமாளுடைய விக்கிரகமும் வெளியேறிவிட்டது. கடவுளது விக்கிரகம் போய்விட்டதால் ஊரினது பொலிவும் குறைந்தது. அப்போது பல்லவன் ஆழ்வாரைத் திரும்பிவரப் பிரார்த்தித்தான். ஆழ்வார் மறுபடியும்,

கணி கண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்ப் படுத்துக்கொள்.

என்று பாடினர். அடுத்தாரை ஆதரிக்கும் அரவணைச் செல்வனும் யாவரும் பின்தொடர மீண்டும் எழுந்தருளித் திருவெஃகாவை யடைந்து ஆழ்வார் சொன்ன வண்ணம் செய்து எல்லோருக்கும் தெளிவாகக் காட்டிக் கொடுத்து இடது திருக்கையைக் கீழ்வைத்துக் கண் வளர்ந்தார். இக்கதை யதோக்த்காரி அல்லது சொன்ன

வண்ணம் செய்த பெருமான் என்னும் காரணப் பெயரை விளக்குகிறது. இந்த யதோக்த்காரி பெருமாள் கோயில் மிகவும் பழைமையானதும் மிகப்பாடல் பெற்ற ஸ்தலமுமாகும். இது சின்ன காஞ்சிபுரத்திற்குப் போகிற வழியில் தேரடிக்கு அருகாமையிலிருக்கிறது.

## பெரிய காஞ்சீபுரம்.

### ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில்.

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில் மிகவும் முக்கியமான ஓர் ஆலயம். "கஞ்சி காமாக்ஷி, காசி விசாலாக்ஷி, மதுரை மீனாக்ஷி" என்று சிறப்பாக வழங்கி வருவது யாவருமறிந்த விஷயம். இவ்விடத்தில் அம்பாள் ஓர் யந்தர வடிவமாக அமைக்கப்பட்டிருக்கிறது. காஞ்சியின் மத்தியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டு அதிக சக்தியுடையதாக இருந்து வருகிறது. மற்ற ஆலயங்களெல்லாம் இந்தக் காமகோடி பீடத்தை நோக்கிய வண்ணமே அமைக்கப்பட்டிருக்கின்றன என்று பெரியோர் சொல்கின்றனர். முன்னொரு சமயம் ஸ்ரீ சங்கராசாரியார் இந்த ஸ்தலத்திற்கு வந்து அஷ்ட லக்ஷ்மிகளையுடைய பீடம் ஸ்தாபித்து ஜபித்து ஸ்ரீ காமாக்ஷியின் உக்கிரத்தைக் குறைத்து அவளுடைய சக்தியை அதிகரித்ததாகச் சொல்லுகிறார்கள். இக்காரணம் பற்றியே சங்கராசாரியாருக்கு இந்த கோயிலில் ஓர் பிம்பம் அமைக்கப்பெற்று பூஜிக்கபபடுகிறது. பங்குனிமீ ஸ்ரீ காமாக்ஷிக்கு நடக்கும் தெப்போற்சவ சமயத்தில் சங்கராசாரியாரும் உற்சவத்தில் கொண்டுவரப்பட்டு பூஜிக்கப்படுகிறார்.

### ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில்.

ஸ்ரீ ஏகாம்பர நாதஸ்வாமி கோயில் மிகவும் முக்கியமான ஓர் சிவஸ்தலம். இக்கோயிலுக்குள் சில புண்ணிய

க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. இவை கம்பாநதி, மாமரம், திருக்கச்சிமயானம் முதலியனவாம். ஒருசமயம் பரம சிவன் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார வேலை நடத்திக் கொண்டிருக்கையில் பார்வதிதேவியார் அவரது கண்களைப் பொத்தினராம். அதனால் கோபங்கொண்ட பரமசிவன் அவளைச் சபித்துப் பிறகு கருணைகொண்டு ஏகாம்பரர் கோவிலினுள்ள கம்பநதி குளத்தில் ஆறுமாதம் தபசுசெய்யச் சொல்லிப் பிறகு அவளை அங்கிகாரம் செய்து கொண்டனராம். இதன் ஞாபகார்த்தமாகவே பங்குனி மீ"த்தில் 12 நாள் உற்சவம் நடைபெற்று வருகிறது. மாவடியின் சிறப்பு ஆரம்பத்திலேயே சொல்லியுள்ளோம். இந்த ஸ்தலத்தில் இருக்கும் லிங்கம் பிருதிவியினலேயே செய்யப்பட்டு பார்வதியால் பூஜிக்கப்பட்டது. இது மாவிருட்சத்தினகீழ் விளங்காநிற்கின்றது. ஆதலால் இம்மாவிருட்சம் அதிக தெய்வத்தன்மை வாய்ந்ததென நம்பப்படுகிறது. இந்தக் கோயிலின் கோபுரம் அதிக உன்னதமாயும் அழகாயுமிருக்கின்றது.

## ஸ்ரீ கச்சபேசுவரர் கோயில்.

இதுவும் பெரிய காஞ்சிபுரத்திலிருக்கும் ஓர் பெரிய சிவஸ்தலம். இதை செங்குந்த முதலியார்கள் பரிபாலித்து வருகின்றார்கள். இக்கோயிலின் உற்சவம் சித்திரை மீ"த்தில் நடைபெறுகிறது. இதைப்பற்றிய புராணக்கதை ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கூர்மாவதாரத்துடன் சம்பந்தப்படுதலால் இந்தஸ்தலம் கச்சபேஸ்வரர் கோயில் என வழங்கி வருகிறது.

## ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோயில்.

இக்கோயிலில் மகாவிஷ்ணுவின் பல அவதாரங்களும் கல்வெட்டுகளில் நாட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தி

னுள்ள கோயில் மூன்று மெத்தைகளா லாக்கப்பட்ட கட்டடமாயிருத்தல் கவனிக்கத்தக்கது. ஒவ்வொன்றிலும் மகாவிஷ்ணுவின் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலைப் பல்லவ அரசனான பரமேசுவரப் போத்தரையன் புதுப்பித்ததாகத் தெரிகிறது. இக்கோயிலைச் சுற்றியுள்ள சாசனங்கள் சரித்திரக்காரருக்கு மிகவும் முக்கியமானவை. அக்கல்வெட்டுகளிலிருந்து, "நாட்டில் உயர் நிலையிலிருந்தவர்கள் அரசனைத் தெரிந்தெடுத்து அபிஷேகம் செய்வித்தல் இந்நாட்டில் வழக்கமாயிருந்த" தென்று தெரிகிறது.

இன்னும் பெரிய காஞ்சீபுரத்தில் பாண்டவப் பெருமாள் கோயில், பச்சை வண்ணர் பவழவண்ணர் கோயில், உலகளந்தப்பெருமாள் கோயில் முதலியன இருக்கின்றன.

## சித்ரகுப்தர் கோயில்.

சித்ரகுப்தருக்கு இதைத்தவிர வேறு எந்த இடத்திலும் கோயில் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பிம்பம் ஒரு கையில் எழுத்தாணியும் மற்றொன்றில் ஓலையும் தாங்கி இருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் செய்யும் நன்மை தீமைகளைக் கணக்கு எடுப்பவர் சித்ரகுப்தரேயாகும். பிரதி வருஷமும் சித்ரா பௌர்ணமியன்று இவருக்கு விசேஷ பூஜை நடைபெறுகின்றது.

## பிள்ளையார் பாளையம்.

## ஸ்ரீ கைலாஸ நாதஸ்வாமி கோயில்.

இக்கோயில் மிகவும் பழைமையானது. இதில் காணப்படும் சிற்பவேலை மிகவும் மெச்சத்தகுந்தது. புராணக் கதைகள் ஒருபுறமிருக்க இதைக் கட்டியவன் ராஜ

ஸிம்ஹன் என்னும் பல்லவ அரசன். அவன் கைலாசத்தை யொத்த கைலாசநாத ஸ்வாமி கோயில் கட்டினனென்று ஒரு சாசனம் கூறுகிறது (கி. பி. 570). இக்கோயிலில் அர்த்த நாரீசுவரர் பிம்பம் ஒன்று இருக்கிறது. இக்கோயில் ஊருக்கு மேற்கே ஓர் மைதானத்தில் தனித்தே இருக்கிறது. இக்கோயிலில் பிரதி வருஷமும் சிவ ராத்திரியன்று மாத்திரந்தான் உற்சவம் நடைபெறுகின்றது.

## ஜிநகஞ்சி.

## திருப்பருத்திக்குன்றம்.

ஸ்ரீ மகாவீரவர்த்தமான ஸ்வாமியின் கோயில் ஒன்று இங்கு விளங்காநிற்கின்றது. இக்கோயில் மிகவும் பழைமையான கோயில். ஆதியில் பல்லவ அரசர்களில் சிலர் ஜைனர்களா யிருந்தபோது இக்கோயிலுக்கு வடக்கேயுள்ள சிறிய கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுச் சாசனங்கள் மிகவும் முக்கியமானவை. பொதுவாகச் செங்கற்பட்டு ஜில்லாவின் சரித்திரத்திற்கே இன்றியமையாத சில விஷயங்களை இச்சாசனங்களே நமக்கு விளக்குகின்றன. இவைகளில் திரிபுவன சக்கரவர்த்தி, குலோத்துங்கச் சோழ தேவர், கிருஷ்ணதேவராயர் முதலியவர்கள் காலத்தை நிச்சயிக்க ஆதாரங்கள் இருக்கின்றன.

விஜயநகரத்து அரசனான இரண்டாவது ஹரிஹரனுடைய குமாரனான இரண்டாவது புக்கராஜனுக்காக சேனாதிபதி இருகப்பர் இக்கோயிலை கட்டினர் என்பது ஒரு சாசனம். கோயிலின்முன் இருக்கும் மண்டபமும் இருகப்பர் தன் குரு புஷ்பசேனர் சொல்படி கட்டினரென்று மற்றொரு சாசனம் கூறுகிறது. இன்னொரு சாசனத்தில்

விஜயநகரத் தரசராகிய கிருஷ்ண தேவராயர் இக்கோயி லுக்கு ஒரு கிராமத்தைச் சர்வமான்யமாகக் கொடுத்தார் என்றெழுதப் பட்டிருக்கிறது. இக்கோயில் கல்வெட்டு வேலைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மண்டபத்தில் அக்காலத்தில் எழுதப்பட்ட வர்ணப்படங்கள் இன்றைக் கும் அழிவுபடாமல் அழகாக இருக்கின்றன.

## ஸ்ரீ ராமானுஜாசாரியர்.

இந்தப் புண்ணிய க்ஷேத்திரமாகிய காஞ்சிபுரத்தில் அநேக சமயாசாரியர்கள் வந்து தங்கி மதப்பிரபாவனை செய்திருக்கின்றனர். வைஷ்ணவ ஆச்சாரியாரான ராமா னுஜர் இங்கே வந்து அநேக நாட்கள் தங்கி இருந்து வரத ராஜரைத் துதிசெய்து வந்தார். அவர் வசித்த இடம் வரதராஜஸ்வாமி கோயில் பிரகாரத்தில் இன்றைக்கும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர் வசித்த வீடும் கோயி லின் கிழக்கோபுரத்திற்கு எதிரே இருக்கிறது. அவர் சம்சாரத்தை வெறுத்து தீக்ஷை பெற்றுக்கொண்ட இட மும் ஹஸ்திகிரி என்கிற வரதராஜர் சன்னிதானமாகும். இங்கே இவர் அநேக நாட்கள் வசித்து வைஷ்ணவ மதத் தைப் போதித்தருளினர்.

## தற்கால நிலை.

இன்றைக்கும் காஞ்சிபுரம் ஓர் பெரிய பட்டினமாக விளங்கி வருகிறது. அவ்விடத்திலுள்ள அழகான பெரிய ஆலயங்களைப் பார்க்க லட்சக்கணக்கான ஜனங்கள் பிரதி வருஷமும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வருகி றார்கள். காஞ்சிபுரத்தில் உற்சவம் நடவாத நாள் இல்லை என்றே சொல்லலாம். எனினும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில்தான் மிகவும் முக்கியமான உற்ச

வங்கள் நடைபெறுகின்றன. ஆகையால்தான் இவ்வூரில் தேசாந்திரிவரி மார்ச்சுமீ முதல் தேதியிலிருந்து ஆகஸ்டுமீ 31உ வரைக்கும் ஊரைவிட்டு ரயில் மார்க்கமாய்ப் போகும் ஒவ்வொருவரும் ஒரு அணு கொடுக்கும்படியாக அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

காஞ்சீபுரம் இப்பொழுது ஒரு முனிசிபாலிட்டியாக இருந்து வருகிறது. இவ்வூரில் முனிசிபாலிடி ஆரம்பித்து சுமார் 50 வருஷம் ஆகிறது: இவ்வூரில் கட்டாயப் படிப்பு வைத்திருக்கிறார்கள். இவ்வூரில் குழாய் ஜலம் வேகவதி ஆற்றில் தோண்டப்பட்டுள்ள ஒரு ஊற்றிலிருந்து வருகிறது. இந்த ஜலம் ஜனங்களுக்கு அதிக சௌக்கியமாகவே இருக்கிறது. இதற்குமுன் இருந்த சில வியாதிகளெல்லாம் இப்பொழுது மறைந்துப்போயின. உற்சவ காலங்களில் முனிசிபாலிட்டியார் தெருக்களில் ஜலம் தெளித்து சுகாதாரத்தை அதிகமாகக் கவனிக்கின்றனர்.

காஞ்சீபுரத்திலுள்ள ரஸ்தாக்கள் மிகவும் அகலமாகவும், இரண்டு பக்கமும் தென்னைமரங்கள் வைக்கப்பட்டிருப்பதால் மிகவும் அழகாகவும் இருக்கின்றன. ஆகையால் வியாதிகள் அதிகமாக இவ்வூரில் பரவுகிறதில்லை. இந்த ரஸ்தாக்களெல்லாம் பண்டைக்காலத்தில் அரசர்களால் போடப்பட்டவை. அக்காலத்திலிருந்தே இவைகளெல்லாம் சுகாதார விதிப்படியே அமைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தகுந்த விஷயம். நகர அமைப்பு நிபுணரான புரொபஸர் கேட்ஸ் என்னும் ஓர் ஐரோப்பியர் உலகத்திலுள்ள பல நகரங்களையும் பார்வையிட்டுக்கொண்டு வந்தார். இந்தியாவிற்கு வந்து காஞ்சீபுரத்தைப் பார்த்து அது மிகவும் மெச்சத்தகுந்த மாதிரியாக அமைக்கப்பட்டிருப்பதாகவும், அதன் ரஸ்தாக்கள் மிகவும் அழகா

## அறிவும் ஆனந்தமும் புகட்டக்கூடிய

# நாவல்களும் புத்தகங்களும்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மாயாவிநோத பரதேசி | 5 | 0 |
| கன்னியின் முத்தம் 4-பாகம் | 5 | 0 |
| மதன கல்யாணி 3-பாகம் | 4 | 8 |
| கருங்குயில் குன்றத்து கொலை 3-பாகம் | 4 | 2 |
| அமராவதி | 4 | 0 |
| காளிங்கராயன் கோட்டை | 4 | 0 |
| ரத்னபுரி ரகசியம் | 4 | 0 |
| பூர்ணசந்திரோதயம் 3, 4, பாகம் | 4 | 0 |
| கனகபூஷணம் | 3 | 8 |
| கமலவள்ளி அல்லது கன்னியின் சமர்த்து 2-பாகம் | 3 | 8 |
| மாண்டி கிருஸ்டோ | 3 | 0 |
| லண்டன் திருடர்கள் | 2 | 12 |
| சடாவல்லவர் | 2 | 8 |
| தனபாலன் | 2 | 0 |
| ஆனந்தசிங் | 2 | 0 |
| காதாமோக்ஷரஞ்சிதம் | 2 | 0 |
| இராஜ ராஜேஸ்வரி | 1 | 8 |
| திருக்கழிகுன்றத்து கொலை | 1 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஜிநேந்திரன் | 1 | 8 |
| பண்டிதை மெஸ்மெரிஸா | 1 | 8 |
| விளையாட்டுச்சான் அல்லது விபரீதக் கொலை | 1 | 6 |
| கப்பல் கொள்ளைக்காரர்கள் | 1 | 4 |
| இந்திரஜித்தன் | 1 | 4 |
| வஜ்ஜிரலேகா | 1 | 4 |
| இருகொலைகளின் ரகசியம் | 1 | 0 |
| சௌந்தராபாய் அல்லது சதி கொலை | 1 | 0 |
| தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி | 1 | 0 |
| ஆனந்த கிருஷ்ணன் | 0 | 12 |
| லண்டன் மாளிகை ரக்ஸியம் | 0 | 12 |
| ரூபாவதி அல்லது சிதம்பர சாமியார் | 0 | 12 |
| கோமளம் காஞ்சி யாத்திரை | 0 | 8 |
| தாய்க் கிழவிகள் தளுக்கு | 0 | 8 |
| தனபதி | 0 | 8 |

விலாசம் :—

**அஜிதகுமார் கம்பெனி,**

ஜி. டி., சென்னை.

# டாக்டர் ஜீ. பீ. என்பவரின்

## சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனை சரக்குகள் சேர்ந்துள்ளன.

இது வாகட முறையினால் தயார் செய்யப்பட்டது.

ரிஜிஸ்டர்ட்



டிரேட்மார்க்.

இதை உபயோகித்தால் ஜலதோஷம் ஒற்றைத் தலைவலி மண்டைக் குத்தல் உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது கெடுதியென்பது யாதொன்றும் நேராது.

சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரேயொரு தடவை உபயோகித்தால் போதும்.

காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல் தன் சுபாவ குணமும் காரமும் மாறவே மாறாது. இதைப்பற்றி அநேக நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். நமது மூக்குத்தூளை ஒரு தடவை உபயோகித்தால் அதன் குணம் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம். வேண்டியவர்களுக்கு விலைப்பட்டி அனுப்பப்படும்.

மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.

தலைவலி-தலைமார்க்குள்ள புட்டி 1-க்கு விலை அணா 4

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

---

குரு பசவா அண்டு கம்பெனி லிமிடெட்,

தபாற்பெட்டி நெ. 510 } பார்க் டவுன்,

தந்தி விலாசம் “ மேடிகேடட் ” } சென்னை.

## வாசனைச் சாமான்கள்.

அசல் அரைக்கீரை விதைத் தைலம். 8 பலம் டின் 1-க்கு ரூ. 1-8-0. 6 பலம் டின் 1-க்கு ரூ. 1-2-0.

நிகரில்லாத சந்தனாதித் தைலம் 18 பலம் டின் 1-க்கு ரூ. 2-0-0. 8 பலம் டின் 1-க்கு ரூ. 1-0-0.

**(Index)** மேற்கூறிய தைலங்களில் ஒரு வருஷத்தில் 6,000 டப்பிகள் வரையில் வித்து முதல் செய்கிரபடியால், தாங்களும் இதை உபயோகித்து அவற்றின் குணத்தினால் சந்தோஷத்தை அடையுங்கள்.

பரிமள கலவைச் சந்தனம் வீ. 1-க்கு 4 ரூ. முதல் ரூ. 10 வரையில் தயார்செய்து கொடுக்கப்படும். இம்மாதிரியான அசல் ஈரசந்தனம், மதராசில் கிடைக்காது என்பதை வாங்கிப்பார்த்தால் தெரியும்.

**(Index)** மேற்கூரிய சாமான்களை பரிக்ஷிக்க தவறாதீர்கள்.

எம். ஏ. சமத் அண்டு பிரதர்ஸ்,
அத்தர் வியாபாரிகள்,
1-233, சைனாபஜார் ரோட்,
(உம்மிடி ராமைய செட்டி கம்பெனி,
நகை வியாபாரிக்கு எதிரில்)
மதராஸ்.

59076

# தென்னிந்தியா ஜீவரக்ஷண சபை,

மதருஸ்.

இந்த சபையானது, எல்லா ஜீவராசிகளையும் எவ்வகையான துன்பத்தினின்றும் நீக்குவதற்கும், மாம்ஸ ஆகாரத்தின் கெடுதியை ஜனங்களுக்குப் போதிப்பதற்கும், தெய்வங்களுக்கு இடும் ஜீவஜந்துக்களின் பலியை யொழிப்பதற்கும், அஹிம்சா தர்மத்தைப் பரவச்செய்வதற்கும், 1926ஹு டிசம்பர்மீ ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பொழுது சென்னையில் தினந்தோறும் காலையில் ஒவ்வொரு தெருவிலும் இந்த சபையாரால் உபன்னியாசம் செய்யப்பட்டு வருகிறது. வெளியூர்களுக்கும் சென்று ஜீவரக்ஷணத்தைப்பற்றி உபதேசங்கள் கூறப்பட்டு வருகின்றன. தமிழ் தெலுங்கு இங்கிலீஷ் ஆகிய பாஷைகளில் ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ. 500க்கு மேல் செலவாகின்றது. அதற்காக ஜீவகாருண்யமுள்ள ஒவ்வொரு பெரியவரின் சகாயமும் தேவையாயிருக்கின்றது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பொருள் உதவியும் ஏனைய உதவியும் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

எல்லா விவரங்களுக்கும் தயைசெய்து கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

கவரவ காரியதரிசிகள்,

தென்னிந்தியா ஜீவரக்ஷண சபை,

436, சௌகார்பேட்டை, மதருஸ்.

# தென்னிந்தியா ஜீவரக்ஷண சபை,

மதருஸ்.

இந்த சபையானது, எல்லா ஜீவராசிகளையும் எவ்வகையான துன்பத்தினின்றும் நீக்குவதற்கும், மாம்ஸ ஆகாரத்தின் கெடுதியை ஜனங்களுக்குப் போதிப்பதற்கும், தெய்வங்களுக்கு இடும் ஜீவஜந்துக்களின் பலியை யொழிப்பதற்கும், அஹிம்சா தர்மத்தைப் பரவச்செய்வதற்கும், 1926ஆ டிசம்பர்மீ ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பொழுது சென்னையில் தினந்தோறும் காலையில் ஒவ்வொரு தெருவிலும் இந்த சபையாரால் உபன்னியாசம் செய்யப்பட்டு வருகிறது. வெளியூர்களுக்கும் சென்று ஜீவரக்ஷணத்தைப்பற்றி உபதேசங்கள் கூறப்பட்டு வருகின்றன. தமிழ் தெலுங்கு இங்கிலீஷ் ஆகிய பாஷைகளில் ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ. 500க்கு மேல் செலவாகின்றது. அதற்காக ஜீவகாருண்யமுள்ள ஒவ்வொரு பெரியவரின் சகாயமும் தேவையாயிருக்கின்றது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பொருள் உதவியும் ஏனைய உதவியும் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

எல்லா விவரங்களுக்கும் தயைசெய்து கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

கவரவ காரியதரிசிகள்,

தென்னிந்தியா ஜீவரக்ஷண சபை,

436, சௌகார்பேட்டை, மதருஸ்.

ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு. 14—2—64